# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **078/ந/2018**

ஆணை எண். **103/2018**

நாள் : **17/03/2018**

**திரு எம். எஸ். முகமது சாலிக்,**
**சென்னை**

– **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையாளர்,**
**காயல்பட்டணம் நகராட்சி,**
**காயல்பட்டணம்.** – **எதிர் மனுதாரர்**

சென்னை, முத்துமாரி செட்டித் தெரு, பழைய கதவு எண்.37, புதிய கதவு எண்.86 முகவரியில் வசிக்கும் திரு எம்.எஸ் முகமது சாலிக் அவர் களின் 26.03.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 078/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் அவர் தாக்கல் செய்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, முத்துமாரி செட்டித் தெரு, பழைய கதவு எண்.37, புதிய கதவு எண்.86 முகவரியில் வசிக்கும் திரு எம்.எஸ் முகமது சாலிக் என்பவர் 09.06.2009 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.95–இல் அறிவிக்கை செய்யப்பட்ட, 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (பொது வெளிப்பாடு) விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்குப் பயன்படும் பொதுத் தகவல் விவரங்களை உரிய முறையில் வெளியிடத் தவறிய தவறான நடத்தைக்காக (Misconduct) காயல் பட்டணம் நகராட்சி ஆணையரைத் தண்டிக்க ஆணையிடக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ( பொது வெளிப்பாடு) விதிகள் ஏற்படுத்தப்பட்டு, 09.06.2009 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.95– மூலம் தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட விதிகளில், அட்டவணை I மற்றும் II–இல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் உரிய முறையில்

தெரிவிப்பதற்கான வழிமுறைகளும் அவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட விதிகள், 2009–ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாள் முதல் செயல்பாட்டிற்கு வந்தும், காயல்பட்டணம் நகராட்சியில், அவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் உரிய முறையில் தெரிவிக்கப்படவில்லை என்பதே மனுதாரரின் முதன்மையான குற்றச்சாட்டு.

3. முறையீட்டு மனுதாரர் தனது மனுவில், காயல் பட்டணம் நகராட்சி பொதுத் தகவல் விவரங்களை மக்கள் அறியும் வகையில் செய்யத் தவறியதைக் குறிப்பிட்டு கீழ்க்காணும் தகவல்களைத் தெரிவித்துள்ளார் :-

(1) காயல் பட்டணம் நகராட்சிக்கான வலைதளத்தை ஐ.பி.(I.P) முகவரியைக் கொண்டு அணுகுவதில் சிரமம் ;

(2) வலைதளத்தில் வழங்கப்பட்டுள்ள விவரங்கள் பழமையானதும், பொதுமக்களுக்கு பயன்படத் தக்க வகையில் இல்லாதது ;

(3) மன்றக் கூட்டத்தின் தீர்மானங்கள் ஒரு மாத காலத்திற்குள் வலை தளத்தில் ஏற்றத் தவறியது ; 2017, அக்டோபர் திங்கள் முதல் புதிய விவரங்களை வலைதளத்தில் ஏற்றத் தவறியது ;

(4) 7 ஆண்டுகளாக மக்கள் சாசன விவரங்கள் புதுப்பிக்கப்படாதது ;

(5) நகராட்சி சேவை குறித்த விவரங்களை ஆறுமாதங்களுக்கு ஒரு தடவை புதுப்பிக்கத் தவறியதுடன் பல ஆண்டுகளாக ஒரே விவரங்கள் தொடருவது ;

(6) ஆண்டுக்கொருமுறை உதவி வழங்கப்படும் திட்ட விவரங்களை மாற்றப்படாமல், ஏழு ஆண்டுகளாக ஒரே மாதிரியான விவரங்கள் தொடருவது ;

(7) ஆண்டுக்கொரு முறை மாற்றப்படக் கூடிய குடிநீர் வழங்கல் போன்ற சேவை வரிகள் புதுப்பிக்கப்படாததால், இடைத்தரகர்கள் பிடியில் பொதுமக்கள் சிக்கித் தவிப்பது ;

(8) பொதுமக்களின் தேவைகளைக் களைவதற்கு நகராட்சியின் எந்தவொரு அலுவலரை அணுக வேண்டும் என்ற விவரங்களை ஆறுமாதத்துக்கு ஒரு தடவை புதுப்பிக்கத் தவறியது ;

(9) ஒப்பந்தப் பணி விவரங்கள், 2012–2013–ஆம் ஆண்டு வரை மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. முழுமையாக வழங்கப்படாதது ;

(10) 2012–2013–ஆம் ஆண்டுக்குப்பின் நிதி அறிக்கைகள் குறிப்பிடப்படாதது ;

(11) நிதித் தணிக்கை விவரங்கள் முழுமையாக வழங்கப்படாதது.

4. முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள பொதுமக்களுக்கு பயன்படும் பொதுத் தகவல்களை, மேற்குறிப்பிட்ட விதிகளில், 5 எண்ணிட்ட விதிகளின் கீழ் வலைத் தளம் அல்லது தகவல் பலகை மூலமாகவோ அல்லது அரசு குறிப்பிடும் முறையிலோ பொதுமக்களுக்கு தெரிவிக்கும் வகையில் நகராட்சி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். மேற்குறிப்பிட்ட விதிகள் 2009–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் முதல் நாள் முதல் நடைமுறைக்கு வந்தும், காயல் பட்டணம் நகராட்சியில் பொதுத் தகவல்களை மக்கள் அறியும் வகையில் செயல்படுத்தாததே மனுதாரரின் குறைபாடாகும்.

5. 2009–ஆம் ஆண்டு தமிழ்நாடு பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ( பொது வெளிப்பாடு) விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுத் தகவல் விவரங்களை வலைத் தளம் மூலமாகவோ அல்லது தகவல் பலகை மூலமாகவோ அல்லது அரசு குறிப்பிடும் வகையில் பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் வெளிப்படுத்த உடன் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென காயல் பட்டணம் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது. நிர்வாகத்தின் வெளிப்படைத் தன்மையை நிரூபிக்கும்பொருட்டு பொதுமக்களின் தேவையை கருத்தில் கொண்டு இதுபோன்ற நேர்வுகளில் செயல்படவேண்டுமெனவும் காயல் பட்டணம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது. மேலும், மேற்குறிப்பிட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டப் பொது விவரங்களை பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் பிற நகராட்சிகளும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுமாறு திருநெல்வேலி நகராட்சிகளின் மண்டல இயக்குநருக்கு அறிவுறுத்தியும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள், 17–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 19/4/18

19.4.18

19/4/18

பெறுநர்

1. நகராட்சி ஆணையாளர்,
காயல்பட்டணம் நகராட்சி,
காயல்பட்டணம்,
தூத்துக்குடி மாவட்டம்.

2. திரு எம். எஸ். முகமது சாலிக்,
எண்.86 (பழைய எண்.37),
முத்துமாரி செட்டித் தெரு,
சென்னை – 600 001.

3. நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,
நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநரகம்,
திருநெல்வேலி.

4. நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி